முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**Ar.O.P. 18/2021**

**நாள்.01.12.2023**

ம.சா.1 திரு.வரதராஜன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறையில் Scientific Assistant என்ற பணியில் உள்ளேன். என்னுடைய நிலமானது சூரங்கோட்டை முதுநாள் கிராமத்தில் உள்ளது. என்னுடைய நிலமானது தேசிய நெடுஞ்சாலை அமைப்பதற்காக அரசால் கையகப்பட்டது. அவ்வாறு கையகப்படுத்துவதற்கு உண்டான விளம்பரம் 3(1) நோட்டிஸ் தினசரி நாளிதழ் மூலமாக பிரசிதிக்கப்பட்டதை நான் பார்த்தேன். அதற்கு பின்னிட்டு நான் ஆட்சேபனையின் பேரில் கையகப்படுத்தப்பட்டதற்குண்டான தொகையை பெற்றுக்கொண்டு அதிக தொகை கோரி மாவட்ட ஆட்சியரிடம் நான் மனு கொடுத்தேன். நான் மனு கொடுத்த பின்னிட்டு தனி தசில்தார் நில எடுப்பு அவர்கள் எனது இடத்தை பார்வையிட்டு அது சம்மந்தமாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மாவட்ட ஆட்சியர் முறையாக விசாரணை செய்து அந்த மனுவினை தள்ளுபடி செய்துவிட்டார் என்றால் மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்பது மட்டும் உண்மை. என்னுடைய நிலமானது நஞ்சை நிலம் என்றால் சரியல்ல, வீட்டுமனை ஆகும். மேற்படி அரசு வருவாய்த்துறை ஆவணங்களில் கையகப்படுத்தப்பட்ட என்னுடைய நிலமானது நஞ்சை நிலம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் மாவட்ட ஆட்சியரிடம் மனு தாக்கல் செய்த பொழுது தினசரி நாளிதழ் அறிவிப்பிற்கு முன்பும் பின்பும் கையகப்படுத்தப்பட் நிலத்தின் மதிப்பை குறித்து ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி நான் கொடுத்த இரண்டு ஆவணங்கள் சந்தை மதிப்பை அதிகம் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக ஏற்படுத்திக்கொண்ட ஆவணம் என்பதால் மாவட்ட ஆட்சியர் என்னுடைய மனுவினை தள்ளுபடி

செய்துவிட்டார் என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியரை நான் இந்த மனுவில் எதிர்மனுதாரராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மாவட்ட ஆட்சியர் சந்தை மதிப்பு மற்றும் வழிகாட்டு மதிப்பை கண்டறிந்துதான் அவர் நிர்ணயம் செய்துள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய கையகப்படுத்தப்பட்ட நிலம் நஞ்சை நிலம் என்றும், மாவட்ட ஆட்சியர் சரியாக ஆவணங்களை பார்த்து போட்ட உத்தரவு சரி என்றும், அதனால் எனது மனு நிலைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி ஆட்சியர் என்னுடைய நிலத்தை பார்வையிட்டுத்தான் உத்தரவு பிறப்பித்துள்ளார் என்றால் சரிதான். 2014ம் வருடத்தில் மாவட்ட ஆட்சியர் என்னுடைய நிலத்தை பார்வையிட்டுத்தான் உத்தரவு பிறப்பித்துள்ளார். என்னுடைய மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், சட்டப்படி தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணையை 2ம் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்கிறார்.

மறு விசாரணை இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .